செய்தி வெளியீடு எண்: 569 நாள்: 24.08.2018

<u>செய்தி வெளியீடு</u>

# மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.எம்.ஆர். விஜயபாஸ்கர் அவர்கள் தலைமையில் C-40 அமைப்பின் பன்னாட்டு பிரதிநிதிகளுடன் ஆலோசனை

இங்கிலாந்து நாட்டின் C-40 என்ற முகமை, மின்சாரப் பேருந்துகளை பல்வேறு நாடுகளில் அறிமுகப்படுதுவதன் மூலம் சுற்றுப்புறச் சூழலை பாதுகாத்தல் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டினை குறைத்தல், பசுமைப் பொருளாதாரத்தின் வளர்ச்சியை உலகளாவிய அளவில் மேம்படுத்துதல் ஆகிய நோக்கங்களை கொண்டு செயல்பட்டு வருகிறது.

இந்த மின்சாரப் பேருந்துத் திட்டத்தினை உலகளவில் 26 நாடுகள் ஏற்றுக்கொண்டு மார்ச்த் திங்கள் 2015–ஆம் ஆண்டில் ப்யூனோஸ் ஏரெஸில் நடைபெற்ற C-40 லத்தீன் அமெரிக்க மேயர் மன்றத்தில் முதன்முதலாக உருவாக்கப்பட்ட அறிக்கையில் கையொப்பமிடப்பட்டுள்ளது. இந்த அறிவிப்புப் பட்டியலில் கையெழுத்திட்டுள்ள அனைத்து நாடுகளும் சுற்றுச் சூழல் மாசுபாட்டினை குறைக்கும் வகையிலான தொழில்நுட்பங்களை பயன்படுத்த தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளன.

பொதுமக்களின் போக்குவரத்துத் தேவைகளை முழுமையாக பூர்த்தி செய்யும் வகையிலும் சுற்றுப்புறச் சூழ்நிலைகளை பாதுகாக்கும் வகையிலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, காற்று மாசுபாட்டினை குறைக்கும் மின்சாரப் பேருந்து திட்டத்தினை C-40 முகமையின் வழிக்காட்டுதல்களின்படி செயல்படுத்தும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் முன்னிலையில் கடந்த 28.03.2018 அன்று தமிழ்நாடு அரசின் போக்குவரத்துத் துறைக்கும், C-40 முகமைக்கும் இடையே அறிக்கை கையெழுத்தானது.

சுற்றுச்சூழல் மாசுபாட்டினைக் குறைக்கும் மின்சாரப் பேருந்துகளை கொள்முதல் செய்வதன் மூலம், புதிய தொழில்நுட்பங்களை புகுத்துதல், இதர வடிவிலான பேருந்துகளைக் காட்டிலும், மின்சார பேருந்துகளை குறைந்த விலையில் கொள்முதல் செய்தல், இவ்வகையான மின்சார பேருந்து போக்குவரத்து செயல்பாட்டினை நடைமுறைப்படுத்துவதற்கு சாலை வரைப்படம் தயாரித்தல், தேவையான உட்கட்டமைப்புகளை ஏற்படுத்துதல், தூய்மையான மின்சாரம் வழங்குதல் போன்ற பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு அரசின் போக்குவரத்துத் துறைக்கு C-40 முகமை தகுந்த உதவிகளை செய்யும்.

இதன் தொடர்ச்சியாக C-40 முகமையின் வெளிநாட்டு பிரதிநிதிகள், ஜேம்ஸ் அலெக்சாண்டர் (James Alexander, Head of the CFF (C40), ஜீர்கன் பாமான் (Jiirgen Baumann, (Capacity Development and Municipal Finance Expert) கடந்த **21.08.2018** முதல் **24.082018** வரையில், சென்னையில் முகாமிட்டு பல்வேறு துறைகளான போக்குவரத்து, நிதி மற்றும் எரிசக்தித் துறையின் உயர்மட்ட அரசு அலுவலர்களை நேரில் சந்தித்து கலந்தாய்வு செய்துள்ளனர். குறிப்பாக, போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. P.W.C. டேவிதார், இ.ஆ.ப., அவர்கள் ஆகியோருடன் விரிவாக கலந்து ஆலோசித்து விரைவில் செயல்படுத்தப்படும் இத்திட்டங்கள் பற்றி கலந்து ஆலோசித்தனர். மேலும், மாநகரப் போக்குவரத்துக் கழக அடையாறு பணிமனையில் நேரில் ஆய்வு செய்து போக்குவரத்துக் கழகங்களின் தற்போதைய செயல்பாடுகளையும் அறிந்துக் கொண்டனர்.

நிறைவாக, இன்று **(24.08.2018)** தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. எம். ஆர். விஜயபாஸ்கர், அவர்களை இக்குழுவினர் நேரில் சந்தித்து இத்திட்டம் பற்றி விரிவாக எடுத்துரைத்தனர்.

வரும் செப்டம்பர் இரண்டாவது வாரத்தில் சான்பிரான்சிஸ்கோவில் நடைபெறவுள்ள உலகளாவிய காலநிலை செயல்பாடு மாநாடு (Global Climate Action Summit) குறித்த மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும், போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களுக்கும் அழைப்பு விடுத்தனர்.

இக்கூட்டத்தில் போக்குவரத்துத்துறை அரசு கூடுதல்தலைமைச் செயலாளர் திரு.P.W.C.டேவிதார் இ.ஆ.ப., போக்குவரத்துத் துறை ஆணையர் திரு.சி.சமயமூர்த்தி இ.ஆ.ப., திரு. ஜேம்ஸ் அலெக்சாண்டர் (Thiru.James Alexander, Head of CFF – (C40), தலைவர், திரு. ஜுர்ஜென் பாவ்மேன் (Thiru.Jurgen Baumann, Capacity Development and Municipal Expert) ஆகியோர் கலந்துகொண்டனர்.

**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் /**
**போக்குவரத்துத் துறை**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**